


நாமக்கல் பி.எஸ்.என்.எல் அலுவலகம் அருகே ஒன்றிய அரசைக் கண்டித்து நடைபெற்ற ஆர்ப்பாட்டத்திற்கு நாமக்கல் கிழக்கு மாவட்டச் செயலாளரும், மாநிலங்களவை உறுப்பினரும், நாமக்கல் மாவட்ட மத்திய கூட்டுறவு வங்கித் தலைவருமான கே.ஆர்.என். இராஜேஸ்குமார் தலைமை தாங்கினார். இந்த ஆர்ப்பாட்டத்தில் மாநகராட்சி மேயர் கலாநிதி, துணை மேயர் பூபதி, நகர கழகச் செயலாளர்கள் ராணா ஆனந்த், சிவக்குமார், ஒன்றிய கழகச் செயலாளர் பழனிவேல், நாமக்கல் கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் டாக்டர் பி.வி.செந்தில் மற்றும் சார்பு அணி நிர்வாகிகள், கழக நிர்வாகிகள், மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி மாவட்ட நிர்வாகிகள், பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.




மயிலாடுதுறை மாவட்டம் மயிலாடுதுறை நகர தி.மு.க. சார்பில் மயிலாடுதுறை கிட்டப்பா அங்காடி அருகே தபால் நிலையம் எதிரில் ஒன்றிய பா.ஜ.க. NDA, அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையாலும், போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததாலும் ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு தட்டுப்பாட்டைக் கண்டித்தும், தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் பா.ஜ.க. அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் மயிலாடுதுறை மாவட்டக் கழக செயலாளர் பூம்புகார் சட்டமன்ற உறுப்பினர் நிவேதா எம். முருகன் தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. உடன் காங்கிரஸ் கட்சியின் சட்டமன்ற உறுப்பினர் எஸ்.ராஜ்குமார், கழக கொள்கை பரப்பு துணை செயலாளர் குத்தாலம் க.அன்பழகன், தலைமை செயற்குழு உறுப்பினர் ஜி.எம்.ரவி, மாவட்ட துணை செயலாளர் எஸ்.செல்வமணி, மயிலாடுதுறை நகர கழக செயலாளர் குண்டாமணி (எ) என்.செல்வராஜ் மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள், கழகத்தினர் உள்ளனர்.




தலைமைக் கழக அறிவிப்பிற்கு இணங்க தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் என்.டி.ஏ. அரசையும், அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் திருப்பூர் தெற்கு மாவட்டம், உடுமலை ஊராட்சி ஒன்றிய அலுவலகம் முன்பு மாவட்டக் கழக பொறுப்பாளர், பொள்ளாச்சி நாடாளுமன்ற உறுப்பினர் கே. ஈஸ்வரசாமி தலைமையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மதச்சார்பற்ற முற்போக்குக் கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்டக் கழக, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.




தலைமைக் கழக அறிவிப்பிற்கு இணங்க தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் என்.டி.ஏ. அரசையும், அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி சார்பில் கோவை, சிங்காநல்லூர் சட்டமன்ற தொகுதி, அண்ணா நகர் பகுதி, வடக்கு சட்டமன்ற தொகுதி ரத்தினபுரி பகுதியில் கோவை மாநகர் மாவட்டப் பொறுப்பாளர் துரை. செந்தமிழ்ச் செல்வன் தலைமையில் ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் கழக தீர்மானக்குழு செயலாளர் நா.கார்த்திக், பகுதி கழக பொறுப்பாளர்கள் மா.சிவகுமரன், லோகு உள்பட மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாநில, மாவட்ட, பகுதி கழக நிர்வாகிகள், வட்ட கழக செயலாளர்கள், நிர்வாகிகள், மாமன்ற உறுப்பினர்கள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.



கழகத் தலைவர், முதலமைச்சர் அவர்களின் ஆணைக்கிணங்க கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டம் ஓசூர் ராம்நகர் அண்ணா சிலை அருகே மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி சார்பில் கேஸ் சிலிண்டர் தட்டுப்பாட்டை தடுக்க தவறிய ஒன்றிய அரசைக் கண்டித்து கிருஷ்ணகிரி மேற்கு மாவட்டச் செயலாளர் பிரகாஷ் எம்.எல்.ஏ. தலைமையில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இந்த ஆர்ப்பாட்டத்தில் மேயர் சத்யா, துணை மேயர் ஆனந்தய்யா, மாநில கலை, இலக்கிய, பகுத்தறிவுப் பேரவை துணை செயலாளர் மாதேஸ்வரன் மற்றும் கூட்டணி கட்சியினர் பல்லாயிரக்கணக்கானோர் மாபெரும் ஆர்ப்பாட்டத்தில் கலந்து கொண்டனர்.



நாகை மாவட்டம் நாகை நகர தி.மு.க. சார்பில் நாகை புதிய பேருந்து நிலையம் அருகே அவுரித் திடலில் ஒன்றிய பா.ஜ.க. NDA, அரசின் தவறான வெளியுறவுக் கொள்கையாலும், போதிய முன்னெச்சரிக்கை நடவடிக்கை எடுக்காததாலும் ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு தட்டுப்பாட்டைக் கண்டித்தும், தமிழ்நாட்டைத் தொடர்ந்து வஞ்சித்து வரும் பா.ஜ.க. அரசையும் அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச்சார்பற்றம முற்போக்குக் கூட்டணி சார்பில் நாளை மாவட்டக் கழக செயலாளரும், தமிழ்நாடு மீன் வளர்ச்சி கழக தலைவருமான எம். கௌதமன் தலைமையில் நடைபெற்ற கண்டன ஆர்ப்பாட்டத்தில் நாகை நகர கழக செயலாளர், நகர் மன்ற தலைவர் இரா மாரிமுத்து, மார்க்சிஸ்ட் கம்யூனிஸ்ட் கட்சியின் மாவட்ட செயலாளர் மாரிமுத்து மற்றும் கூட்டணி கட்சி தலைவர்கள், கழகத்தினர் பங்கேற்றனர்.




தலைமைக் கழக அறிவிப்பிற்கு இணங்க தமிழ்நாட்டை தொடர்ந்து வஞ்சித்து வரும் என்.டி.ஏ. அரசையும், அதன் அடிமைக் கூட்டணியையும் கண்டித்து மதச் சார்பற்ற முற்போக்குக் கூட்டணி சார்பில் கோவை வடக்கு மாவட்டம், கூடலூர் நகராட்சி மேட்டுப்பாளையம் மெயின் ரோடு கேஸ் கம்பெனி அருகில் கழக துணைப் பொதுச் செயலாளர், நீலகிரி நாடாளுமன்ற உறுப்பினர், ஒன்றிய முன்னாள் அமைச்சர் ஆ.ராசா தலைமையில் மாவட்டச் செயலாளர் தொண்டாமுத்தூர் அ.ரவி முன்னிலையில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது. இதில் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணி கட்சி நிர்வாகிகள், மாநில, மாவட்ட கழக நிர்வாகிகள், ஒன்றிய, நகர, பகுதி, பேரூர், வட்ட கழக, கிளைக் கழக செயலாளர்கள், நிர்வாகிகள், உள்ளாட்சி பிரதிநிதிகள், அனைத்து சார்பு அணி நிர்வாகிகள் பலர் கலந்து கொண்டனர்.

### கடந்த 5 ஆண்டுகளில் தமிழுக்காக

# ஒன்றிய அரசு செலவு செய்த தொகை எவ்வளவு?

## மக்களவையில் தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி!

***புதுடெல்லி, மார்ச் 19 -***

***சர்வதேச அளவில் தமிழ் மொழி ஆய்வை விரிவுபடுத்துவதற்கும், ஆவணக் காப்பகங்களை உருவாக்குவதற்கும் ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கை என்ன என்றும் தமிழ் ஆராய்ச்சிக்காக உலக மாநாடுகள் நடத்த வழங்கப்பட்ட நிதி விவ ரங்கள் என்ன என்றும் கழக நாடாளுமன்ற குழுத் துணைத் தலைவரும் கழக விளையாட்டு மேம்பாட்டு அணிச் செயலாளருமான தயாநிதி மாறன் எம்.பி. கேள்வி எழுப்பியுள்ளார்.***

*அதன் விவரங்கள் பின்வருமாறு:*

*கடந்த ஐந்து ஆண்டுகளில், செம்மொழி தமிழின் வளர்ச்சிக்காகவும், ஆராய்ச்சிக்காகவும், உலகம் முழுவதும் பரப்பவும் ஒன்றிய அரசால் ஒதுக்கப்பட்ட மற்றும் பயன்படுத்தப்பட்ட நிதி எவ்வளவு? இதே விவரங்களை மற்ற செம்மொழிகளுக்கும், ஆண்டு மற்றும் திட்டம் வாரியாக தர முடியுமா?*



*மத்திய செம்மொழித் தமிழாய்வு நிறுவனம் (CICT) மற்றும் பிற நிறுவனங்களுக்கு ஆராய்ச்சி செய்ய, ஓலைச்சுவடிகளை டிஜிட்டல் மயமாக்க, மொழிபெயர்ப்பு திட்டங்கள், ஆய்வுதவிகள் மற்றும் தமிழ் ஆய்வு பற்றிய உலக மாநாடுகள் நடத்துவதற்காக வழங்கப்பட்ட நிதி விவரங்கள் என்ன?*

*செம்மொழித் தமிழில் கல்விசார் ஆராய்ச்சி, புத்தக வெளியீடுகள், உலகளவில் பரவலாக்கல் மற்றும் உயர் கல்வி ஆகியவற்றை, இந்நிதிகள் எவ்விதம் வலுப்படுத்தியுள்ளன என்பதை மதிப்பீடு செய்ய ஒன்றிய அரசு ஏதேனும் நடவடிக்கை எடுத்துள்ளதா?*

*சர்வதேச அளவில் தமிழ் மொழி ஆய்வை விரிவுபடுத்துவதற்கும் ஆவணக் காப்பகங்களை உருவாக்குவதற்கும் பல்கலைக்கழகங்களுடன் இணைந்து செயல்படுவதற்கு ஒன்றிய அரசு எடுத்துள்ள நடவடிக்கைகள் என்ன?*

*தமிழின் செம்மொழிப் பாரம்பரியத்தின் தொடர் வளர்ச்சி மற்றும் பாதுகாப்பை உறுதி செய்வதற்காக, அதற்கானநிதி உதவியையும் அதிகரிக்கநிறுவன சுயாட்சியையும் ஒன்றிய அரசு திட்டமிட்டுள்ளதா?*

*இவ்வாறு அவர் தெரிவித்துள்ளார்.*

# நெல்லை கிழக்கில் ஆர்ப்பாட்டம்!

நெல்லை, மார்ச் 19-

நெல்லை கிழக்கு மாவட்டம் மதச்சார்பற்ற முற்போக்கு கூட்டணியின் சார்பில் ஒன்றிய பா.ஜ.க - NDA கூட்டணியின் தவறான வெளிநாட்டு கொள்கைகளால் ஏற்பட்டுள்ள சமையல் எரிவாயு (LPG) விலை உயர்வு மற்றும் எரிவாயு சிலிண்டர் பற்றாக்குறையால் பொதுமக்களின் வாழ்வாதாரத்தை பாதிக்கும் நடவடிக்கைகளை கண்டித்து நெல்லை கிழக்கு மாவட்ட தி.மு.க. பொறுப்பாளர் ம.கிரகாம்பெல் தலைமையில்,நெல்லை கிழக்கு மாவட்ட காங்கிரஸ் தலைவர் வி.பி.துரை முன்னிலையில் களக்காடு மணிக்கூண்டு அருகில் ஒன்றிய NDA அரசைக் கண்டித்து மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்தில் நெல்லை நாடாளுமன்ற உறுப்பினர் ராபர்ட் புரூஸ் பங்கேற்று ஒன்றிய NDA அரசைக் கண்டித்து கண்டன உரையாற்றினார்.

நிகழ்வில் நகர செயலாளர் மணி சூரியன், ஒன்றிய செயலாளர்கள் ராஜன், செல்வகருணாநிதி,நகர்மன்ற தலைவர் சாந்தி சுபாஷ், பேரூர் செயலாளர்கள் அயூப்கான், கசமுத்து,முன்னாள் காங்கிரஸ் மாவட்ட தலைவர் மோகன் குமாரராஜா, தமிழ்ச் செல்வன், சி.பி.ஐ. ஒன்றிய செயலாளர் லெனின் முருகானந்தம், சி.பி.எம். ஒன்றிய செயலாளர் ரவிச்சந்திரன்,தே.மு.தி.க. ஒன்றிய செயலாளர் சக்திவேல், எஸ்.டி.பி.ஐ. மாவட்ட செயலாளர் மீராஷா, எஸ்டிபிஐ நகர தலைவர் பக்கீர் மைதீன், தே.மு.தி.க. நகர செயலாளர் பழனி, மாவட்ட வழக்கறிஞர் அணி பாலசுந்தர், மாவட்ட விவசாய அணி மாடசாமி மற்றும் கழக நிர்வாகிகள், கூட்டணி கட்சி நிர்வாகிகள் உட்பட பொதுமக்கள் பலர் கலந்து கொண்டனர்.